MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# திருக்குறளில் வேளாண்மை

**ஆய்வாளர்**
**மா.சுகன்யா தேவி,**
தமிழ் இலக்கியம் முதுகலை இரண்டாம் ஆண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**நெறியாளர்**
**முனைவர் சொ.கோகில மீனா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
Cell No-9095040184
Email: srimeena1986@gmail.com

# AGRICULTURE IN THIRUKKURAL

STUDENT NAME
M. Suganya Devi,
Second Year, M.A. Tamil Literature,
Sakthi Women's Arts and Science College,
Ottanchatram, Dindigul District.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**Guide Name**
**Dr.S.KOHILAMEENA**
**Assistant Professor in Tamil,**
**Sakthi College Of Atrs and Science for Women,**
**Oddachathiram.**
Cell No-9095040184
Email: srimeena1986@gmail.com

## Abstract

Agriculture is the foundation of human civilization. Since the time humankind transitioned from a nomadic lifestyle to a settled one, agriculture has been its lifeblood. No society can develop without food production. The Thirukkural stands out as a work that clearly articulates the importance of agriculture in world literature.

Thiruvalluvar considers agriculture not merely as a profession, but as the fundamental force that sustains the world. That is why, in the section on wealth and material life, he dedicated a separate chapter to "Agriculture," explaining the glory of the farmer, the social benefits of agriculture, and its ethical significance.

## ஆய்வுச்சுருக்கம்

மனித நாகரிகத்தின் அடித்தளம் வேளாண்மை. மனிதன் இடம்பெயரும் வாழ்விலிருந்து நிலைத்த வாழ்க்கைக்கு மாறிய காலத்திலிருந்தே வேளாண்மை அவனது உயிர் ஆதாரமாக இருந்து வருகிறது. உணவு உற்பத்தி இல்லாமல் எந்தச் சமூகமும் வளர்ச்சி அடைய முடியாது. இத்தகைய வேளாண்மையின் முக்கியத்துவத்தை உலக இலக்கியங்களில் மிகத் தெளிவாக எடுத்துரைத்த நூலாக திருக்குறள் விளங்குகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

திருவள்ளுவர் வேளாண்மையை வெறும் தொழிலாக அல்லாது, உலகம் இயங்குவதற்கான அடிப்படைச் சக்தியாகக் கருதுகிறார். அதனால் தான் பொருட்பாலில் தனியாக “**உழவு**” என்ற அதிகாரத்தை அமைத்து, உழவரின் பெருமையையும், வேளாண்மையின் சமூகப் பயனையும், அறவியல் உயர்வையும் விளக்கியுள்ளார்.

## திறவுச் சொற்கள்

வேளாண்மை, உழவர் சமுதாயம், அறநெறி, உழவும் சுயமரியாதையும், வேளாண்மையும் அரசும், உழவியல் தொழில்நுட்பம் ஆகியவை ஆகும்.

## வேளாண்மையின் தோற்றம்

மனிதன் ஆரம்பக் காலக்கட்டத்தில் இயற்கையில் கிடைத்த காய்கள், கனிகள், கிழங்குகள், மிருகங்கள் போன்றவற்றை உணவாக உண்டு நாடோடியாக வாழ்ந்து வந்தான். இதன்பின் சிக்கிமுக்கிக் கற்களை உரசி நெருப்பைக் கண்டுபிடித்து காய்கள், கிழங்குகள் மற்றும் வேட்டையாடும் விலங்குகள் போன்றவற்றைச் சமைத்துண்டான். பின் ஆண், பெண் வேறுபாட்டை அறிந்து இலைகள், மரப்பட்டைகள், விலங்குகளின் தோல் போன்றவற்றால் தனது உடலைப் பாதுகாத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தக் காலமே வரலாற்றில் பழைய கற்காலம் அல்லது பேலியோலிதிக் காலம் (Palaeolithic Age) ஆகும். இலைகள்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மரப்பட்டைகள், விலங்குகளின் தோல் போன்றவற்றால் தனது உடலைப் பாதுகாத்துக் கொண்ட மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டான். நிலையான வாழ்க்கையை மேற்கொண்டதன் விளைவாகத் தனக்குத் தேவையான உணவுகளைத் தானே உற்பத்தி செய்துகொண்டான். இவ்வாறு உற்பத்தி செய்ததின் தொடக்கமே வேளாண்மையின் தோற்றம் ஆகும்.

மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்த காலமே வரலாற்றில் புதிய கற்காலம் அல்லது நியோலிதிக் காலம் (Neolithic Age) ஆகும். இவற்றைப் “பழைய கற்காலத்தில் மனிதன் உணவைத்தேடி நாடோடியாக அலைந்தான். பழங்கள், காய்கள், கிழங்குகள் மற்றும் கொட்டைகளைச் சேகரித்து உண்டான். பின் மிருகங்களை வேட்டையாடினான். சுpக்கி முக்கிக் கற்களை உரசி நெருப்பைக் கண்டு பிடித்தான். இலைகளாலும், மரப்பட்டைகளாலும், மிருகங்களின் தோலினாலும் தன் உடலைப் பாதுகாத்துக் கொண்டான். புதிய கற்காலத்தில் மனிதன் வேளாண்மையில் ஈடுபட ஆரம்பித்தான்” என்பதின் மூலம் தெளியலாம். இந்தப் பழைய, புதிய கற்காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றுக்கு முந்திய காலம் என்பர். வரலாற்றுக்கு முந்திய காலம் என்பது கி.மு.4000 முதல் கி.மு.3500 வரையிலான காலம் ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆகவே, வேளாண்மை தோற்றம் பெற்றது வரலாற்றுக்கும் முந்திய காலம் அல்லது கற்காலம் என்பதனை நாம் ஐயமுறத் தெளியலாம்.

## வேளாளர் யார்?

சங்க காலத்தில் வள்ளுவன் என்பது ஒரு தொழிலின் பெயர். அது அரசருக்கும் மேலான அந்தரங்கச் செயலாளர் போன்ற உள்படு கருமத் தலைவரி என்னும் பதவியைக் குறிக்கும்.

“வள்ளுவன் சாக்கை எனும்பெயர் மன்னர்க்கு
உள்படு கருமத் தலைவர்க்கு ஒன்றும்”

என்று சேந்தன் திவாகரம் கூறுகின்றது. உயர்ந்த அரசியல் அலுவலர் என்று குறிப்பிடுகிறது பதிற்றுப்பத்து. சங்க காலத்தில் வாழ்ந்த நாஞ்சில் வள்ளுவன் என்னும் சிற்றரசன் வேளாளனாக இருப்பது நோக்கத்தக்கது.

## வேளாண்மையின் இன்றியமையாமை

வரலாற்றுக்கும் முந்திய காலத்தில் தோற்றம் பெற்ற வேளாண்மையே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதக் காரணமாகும். நாம் ஒரு நாட்டின் இயற்கை வளங்களைச் சரியாகவும், சிறப்பாகவும் பயன்படுத்துவதன் மூலமே தனிமனித வருமானத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல முடியும். இவ்வியற்கை வளங்களை நாம் அதிகம் பயன்படுத்தி செய்யும் தொழிலே வேளாண்மைத் தொழிலாகும். இவ்வேளாண்மைத் தொழிலே நாட்டின் இன்றியமையாதத் தொழிலாகக் கருதப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஏனெனில், சுழன்று கொண்டிருக்கும் இவ்வறிவியல் யுகத்தில் எத்தனையோ தொழில்களும் துறைகளும் உருப்பெற்றாலும் அனைத்து மக்களுக்கும் பசியின்றி உணவளிப்பது வேளாண்மைத் துறையேயாகும்.

## திருக்குறளின் அமைப்பும் வேளாண்மையும்

திருக்குறள் மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. அறத்துப்பால்
2. பொருட்பால்
3. இன்பத்துப்பால்

இவற்றில் **பொருட்பாலில்** இடம்பெறும் **உழவு (அதிகாரம்** 104) வேளாண்மைக்கு அர்ப்பணிக்கப்பட்ட அதிகாரமாகும். இதன் மூலம் திருவள்ளுவர் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையே என்பதை வலியுறுத்துகிறார்.

## நால்வகைப் பிரிவு

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவு களிலும் பல்வேறு உட்பிரிவுகள் தோன்றலாயின. நான்காவது பிரிவாகிய வேளாளர் பிரிவில் தாங்களே நேரடியாக உழுது உண்போர் என்றும் பெரும் பரப்பாக நிலங்களை வைத்துக்கொண்டு குத்தகை பெற்று வாழும் நிலக்கிழார்கள் என்றும் பாகுபாடுகள் தோன்றலாயின. 'உழவு' என்ற அதிகாரத்தில் உழவர் சமுதாயம் பற்றிய தமது தெளிவான கருத்துக்களை திருவள்ளுவர் மிக நுட்பமாக வெளிப்படுத்துகிறார். உழவுத் தொழிலில் ஈடுபடவைப்பதும் அத்தொழிலை எளிமையாக்கித்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தருவதும் ஆள்வோரின் கடமையாகும் என்று அவர் கருதுகிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தனது நாட்டில் பசிப்பிணி மருத்துவனாகத் திகழ்ந்த காரணத்தினால்தான் 'யான் வாழும் நாளும் மன்னன் வாழிய' என்று புலவர் வாழ்த்துவதாகப் புறநானூறு கூறுகிறது.

## இலக்கியச் சான்றுகள்

மனித நாகரிகத்தில் மிகப் பழமையான தொழில் என்று சொன்னால் அது வேளாண்மையேயாகும். அனைத்து மக்கள் உய்யும் வண்ணம் உயர்வான தொழிலாக அது விளங்குவதாலேயே,

**“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை” (குறள்.** 1031)

என்கிறார் வள்ளுவர் பெருந்தகை. மக்கள் இயற்கையோடு இயைந்த, செம்மையான வாழ்வு வாழ்ந்தனர் என்பதற்கான இலக்கியச் சான்றுகள் தமிழ் மொழியில் குவிந்து கிடக்கின்றன.

## வேளாண் தத்துவம்

பண்டைய காலத்தில் உருவாக்கப்பட்ட வேளாண் தொழில்நுட்பங்கள் இன்றளவும் இன்றியமையாதனவாகவே கருதப்படுகின்றன. இதை அறியும் பொழுது பண்டையத் தமிழர்களின் வேளாண் அறிவியல் பற்றிய தெளிவும் நுண்ணறிவும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

உழவு என்னும் அதிகாரத்தில், வேளாண்மைத் செந்நாப் புலவர்.

**“ஏரினும் நன்றாம் எருவிடுதல் நட்டபின்**

**நீரினும் நன்றதன் காப்பு” (குறள். 1038)**

என்ற குறளில் உழுவதைக் காட்டிலும் உரமிடுதல் முக்கியமானது. களையெடுப்பதும் நீர்ப் பாய்ச்சுவதும் மிகவும் முக்கியமானவை. பயிர்ப் பாதுகாப்பு அதைவிட முக்கியமானது என்றுரைக்கிறார்.

## உழவர் சமுதாயம்

உழுகின்றவர்கள் தங்களைத் தேய்த்துக்கொண்டு வாழவைப்பதால், அவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள். மற்றவர்கள் அவர்களுக்கேற்ற உதவிகளைச் செய்தல் வேண்டும் என்று நினைக்கும் வள்ளுவர்,

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**

**எழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள். 1032)**

எனக் கூறுகிறார். உணவின்றி உயிர் வாழ்க்கை இல்லை. அவ்வுணவை விளைவிக்கும் உழவர் மன்னுயிர்த் தேருக்கு அச்சாணியாகவும் மன்பதை மரத்திற்கு ஆணி வேராகவும் கருதப்பட்டனர். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும் குலத்தாருள் வேளாளர் ஏனை முக்குலத்து இல்லறத்தையும் தாங்கி வந்ததனால் வேளாளரே சிறந்த இல்லறத்தாராகக் கருதப்பட்டனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை" (குறள் .41)**

என்ற குறள் அதனாலேயே அமைந்திருக்க வேண்டும்.

பலருக்கும் உணவளித்துக் காத்ததனாலேயே வேளாண் வினையைத் திருக்கை வழக்கம்' எனச் சிறப்பித்துக் கூறினார் கம்பர். 'திருக்கை வழக்கம் என்பது தெய்வத்திற்குப் படைத்த திருச்சோற்றைப் பலருக்கும் வழங்குவதாகும். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' (குறள். 1033) என உழவனைச் சிறப்பித்துக் கூறியுள்மையால் உழவனே தலைமைக் குடியானவன் என்று அவர் கொண்டமை புலனாகும்.

உழவர்கள் உலகை வாழவைக்க வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்திருக்கிறார்கள். ஒரு நாடு உழவுத் தொழிலில் சிறக்கவில்லையெனில் அந்நாட்டை ஒரு நாடாகவே கருதமுடியாது. அந்நாட்டில் வாழும் மக்களும் மக்களாக வாழ முடியாது. பசித்த மனிதன் மனிதப் பண்போடு எப்படி வாழ முடியும்? அவன் விலங்கினும் கீழான ஒரு வாழ்க்கையையே வாழ முடியும். வேளாண்மை விளைபொருட்கள் வேண்டிய அளவுக்கு விளையாத நாட்டில் கலை இல்லை. எனவே உழவர்கள் தொழுது உண்பவர்களைக் குறைவாகக் கருதாமல் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்தனர்.

நாட்டின் பொருள் வருவாய்க்கு உழவுத் தொழிலே அடிப்படையாக இருந்து வந்துள்ளது. தள்ளா விளையுள் பெற்று உணவுப் பொருளால்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

நிறைந் திருந்த நாடு மிகச் சிறந்த நாடாகக் கருதப்பட்டது. அத்தகைய நாட்டை உருவாக்கும். உழைக்கும் உழவர்களைப் பெற்ற மன்னர்கள் அண்டை நாடுகளையும் தங்களது நாட்டோடு இணைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தார்கள். நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழவர்களே வித்தாகத் திகழ்ந்தார்கள்.

## உழவும் சுயமரியாதையும்

திருவள்ளுவர், உழவுத் தொழிலைச் சுயமரியாதையுடன் செய்யும் உயர்ந்த தொழிலாக வர்ணிக்கிறார்.

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்**
**மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வார்”**

உழைத்து உண்ணும் உழவர்களே உண்மையான வாழ்வை வாழ்கிறார்கள். பிறர் உழைப்பை சார்ந்து வாழ்பவர்கள் அவர்களைப் பின்தொடர்பவர்கள் மட்டுமே. இங்கு உழைப்பு, தன்னிறைவு, சுயமரியாதை ஆகிய அறநெறிகள் வேளாண்மையுடன் இணைக்கப்படுகின்றன.

## வேளாண்மையின் அறநெறி

திருக்குறளில் வேளாண்மை அறத்தோடு இணைக்கப்படுகிறது. உழவு என்பது வெறும் உற்பத்தி அல்ல; அது தர்மச் செயல்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“தொடிப்புழுதி கஃசா உணக்கின்**

**பிடித்தெருவும் வேண்டா நிலம்”**

நிலத்தைச் சரியாக உழுது பராமரித்தால், உரம் போட வேண்டிய அவசியமேஇல்லை. இதன் மூலம், இயற்கையை மதித்து வேளாண்மை செய்ய வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார். இது இன்றைய இயற்கை வேளாண்மை கோட்பாடுகளுக்கும் பொருந்துகிறது.

## நீர் மேலாண்மையும் வேளாண்மையும்

வேளாண்மைக்கு நீர் அடிப்படை. திருவள்ளுவர் மழையின் அவசியத்தை வான்சிறப்பு அதிகாரத்தில் விளக்குகிறார்.

“நீரின்றி அமையாது உலகெனின்

யார்யார் வாழ்வார் இவ்வுலகில்?”

மழை இல்லையெனில் வேளாண்மை இல்லை; வேளாண்மை இல்லையெனில் உலக வாழ்க்கையே இல்லை.

## வேளாண்மையும் அரசும்

ஒரு நாட்டின் வளம் அதன் வேளாண்மையில்தான் உள்ளது. நல்ல அரசன் உழவர்களை பாதுகாக்க வேண்டும்.

**“எரியுறும் வெங்கணல் போல**
**உழவர் மனம் சுடாத அரசு”**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

உழவரின் மனம் துன்பப்படாத வகையில் ஆட்சி நடக்க வேண்டும். வரி சுமை, துன்புறுத்தல் ஆகியவை வேளாண்மையை அழிக்கும்.

## வேளாண் மரபின் ஈகைத் தன்மை

உழவுத் தொழில் செய்பவர்கள் இரந்துண்ணும் பழக்கம் உடையவர்கள் அல்லர். தங்களுக்கு மட்டும் என உணவுப் பொருட்களை உற்பத்தி செய்துகொள்ளும் தன்னலவாதிகளும் அல்லர். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் பொருள் வழங்கக் கூடியவர்கள்; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புகின்றவர்கள்; பகடு நடந்த கூழ் பல்லோரோடு உண்பவர்கள் ; ஈகைப் பண்பிற்கு வித்திட்டவர்கள்.

**“இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது**

**கைசெய்தூண் மாலை யவர்” (குறள். 1035)**

என்று வள்ளுவர் உழவரின் ஈகைத் தன்மையைப் பறை சாற்றுகிறார்.

உழவர்க்குச் சோர்வு தரும் நிலை உருவாகுமாயின் நாடு அல்லலுறும். அதனாலேயே பண்டை நாளில் புலவர்கள் அரசர்களுக்கு அருளுரையும் அன்புரையும் வழங்கும் போது

**“புரந்தரும் பாரம் ஓம்பி வாழவேண்டும்”**

என்று கூறினார்கள். ஆதலின் அவர்களின் கை மடங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது சமுதாயத்தின் கடமையாகும் என்கிறார் வள்ளுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“உழவினர் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்**

**விட்டோம்என் பார்க்கும் நிலை” (குறள். 1036)**

என்று குறிப்பிடுவதை இங்கு நினைவுகூர வேண்டும். 'ஆசையை விட்டொழித்து துறவு மேற்கொண்டுவிட்டேன் என்பவரால் கூட வாழமுடியாது' என்ற நிலை உழவுத் தொழில் நின்று போனால் ஏற்படும் என்பது புலவர் கருத்து.

## பகைவன் விரும்பும் உழவன்

வேளாண் தொழிலில் உழவுத் தொழில் முதன்மையாக நடைபெறும் நாட்டில், அந்தத் தொழில் மூலம் மேன்மையடைய நெல்வளத்தைப் பெருக்கும் நல் உழவர்கள் வாழ்வார்களானால் அந்நாட்டைப் பகைவர்கூட விரும்புவர். வேற்றரசர் கூட அந்த நாட்டைத் தன் புகலிடமாகக் கொள்வர். இதையே,

**“பல்குடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அல்குடை நீழ லவர்” (குறள். 1034)**

என்கிறார் வள்ளுவர். கதிரின் தண்ணொளி நிழலில் வாழும் உழவர் பல அரசர்களின் குடை நிழல்களையும் தம் குடைக்கீழ்க் காண வல்லாராவர். சிலப்பதிகார நாடுகாண் காதையில் 'இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்...' என்று கூறப்படுவது இதனால்தான்.

## உழவியல் தொழில்நுட்பம்

வேளாண் தொழில்நுட்பங்களை மிகவும் தெளிவாக விளக்குகிறார் வள்ளுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

வேளாண் பணிகளில் முதன்மையானது நிலத்தைப் பண்படுத்துவ தாகும். நிலம் ஆழமாக உழப்பட வேண்டும். இவ்வாறு உழும்போது கீழ் மண் மேல் மண்ணாகவும் மேல் மண் கீழ் மண்ணாகவும் மாறும். பின்னர், உழுத நிலத்தை நன்கு ஆறப் போட வேண்டும். இதனால் மண்ணினுள் காற்றுப் புகுந்து வெளியிலுள்ள பிற சத்துப் பொருட்களைத் தன்பால் சேமித்து வைத்துக்கொள்ள முடியும்; நிலத்தில் முளைக்கும் களைகளையும் வேரோடு அழிக்க முடியும்.ஒரு பலம் எடையுள்ள மண்கட்டி கால் பலமாகும் வரை உழவேண்டும். அவ்வாறு உழுத நிலம் ஈரம் நீங்கி உலர்ந்துவிட்டால், அந்நிலத்தில் ஒருபிடி எருகூட இட வேண்டியதில்லை; பயிர் செழித்து வளரும். இது அறிவியல் உண்மை. இந்த அறிவியல் உண்மையின் கண்டுபிடிப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் விளக்கியிருக்கக் காண்கிறோம். இதனை வள்ளுவர்,

**“தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்” (குறள் . 1037)**

என்று கூறுகின்றார். அறிவியல் கருவிகளைக் கொண்டு பல ஆண்டுகள் ஆய்வு நடத்தி, கண்டுபிடிக்கும் அறிவியல் கருத்துக்களை இரண்டே வரிகளில் நுட்பமாக விளக்கிக் கூற வள்ளுவரால் மட்டுமே முடியும். வளம் குறைந்த நிலம் என்றாலும் தக்கவாறு உரத்தையும் உழைப்பையும் ஈந்தால் பயிர் செழித்து வளரத்தவறாது. எனவே வளமற்ற நிலம், பயனற்ற

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மண் என வறுமையைக் காட்டி வாளாது. சோம்பி இருக்கும் ஒருவனைக் கண்டு மண்மகள் எள்ளி நகையாடு வாள் (குறள் 1040). இந்தச் சிறப்புக்களையுடைய வேளாண் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பது இன்றுவரை கவிஞர்களின் கருத்தாகவும் உள்ளது.

**“நாங்கள் சேற்றில்**
**கால் வைக்காவிட்டால்**
**நீங்கள் சோற்றில்**
**கைவைக்க முடியாது”**

என உழவரின் குரலில் புதுக்கவிஞன் ஓங்கி ஒலித்து, விழிப்பூட்டியதும் வேளாண்மையின் சிறப்புக் கருதியே.

**முடிவுரை**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் வேளாண்மையின் தொழில் நுட்பத்தைப் பற்றி விளக்கியுள்ளார். தமிழரின் உழவு சார்ந்த வாழ்வு முறையைக் காட்டுகிறது. அந்த மரபின் தொடர்ச்சி சென்ற நூற்றாண்டின் முற்பகுதிவரை தொடர்ந்து இருந்திருக்கிறது. இன்றைய காலக்கட்டத்தில் புதுமை அறிவியல் தொழில் நுட்பங்களும், வணிகமயமாதலின் தாக்கமும் உழவைப் பின் தள்ளியிருப்பது கசப்பான உண்மை ஆகாமல் வேளாண்மையை மேம்படுத்துவோம். ஒரு நாட்டின் ‘முதுகெலும்பு’ எனக் கருதப்படும் வேளாண்மை, வரலாற்றுக்கும் முந்திய காலத்தில் தோற்றம் பெற்று, நாட்டின் வளர்ச்சியில் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இவ்வியற்கை வேளாண்மை மக்கள், அஃறிணைகள் மற்றும் சுற்றுச் சூழலிற்குச் சிறந்ததென்பதையும், இவ்வேளாண்மை திருக்குறளில் மேற்கண்டவாறு இடம்பெற்றுள்ளமையையும் இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

## துணை புரிந்த நூல்கள்

1.திருக்குறள் – பரிமேலழகர் உரை
2.இரா.நாகசாமி –தமிழ்ர் வேளாண்மை மரபு
3.செ.வை.சண்முகம் – தமிழர் பண்பாடும் வேளாண்மையும்
4.கு. பிராமலதா – தமிழர் வேளாண்மை மரபு